2013 ஏப்ரல் 19]

சென்று கறவைப் பசுக்களை வாங்கவிடுகிறார்கள். ஒரு பசுவின் விலை ரூ.28,000/— என்று சொன்னால், ரூ.2,000/—ஐ பயனாளிகளின் கையிலே வழங்கிவிடுகிறோம். ரூ.25,000/— என்று சொன்னால், ரூ.5,000/—ஐ பயனாளிகளின் கையில் வழங்கிவிடுகிறோம் என்று என்னுடைய மானியக் கோரிக்கையிலே சொன்னேன். ரூ.30,000/—க்குக் குறைவாக வாங்கும்போது மீதி பணத்தை அவர்களின் கையில் கொடுத்து விடுகிறோம். கிட்டத்தட்ட இரண்டு வருட காலமாக சிறப்பாக இந்தத் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ரூ.30,000/—க்கு மேற்கொண்டு வழங்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொண்டு, அந்த உறுப்பினர் இந்தத் திட்டத்தை குறை சொல்ல முயற்சி செய்திருக்கிறார்; யாரும் குறை சொல்ல முடியாத இந்தத் திட்டத்தை குறை சொல்ல வேண்டுமென்று சொல்லியிருக்கிறார் என்பதை இந்தத் தருணத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 277, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பெருமாள், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

277—

பேருந்து வசதி

***5424—திரு. செ. பெருமாள்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலத்திலிருந்து ஏற்காடு வழியாக வெள்ளக்கடை, நல்லூர், பெரியேரிக்காடு கிராமங்களுக்குப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சேலம் அரசுப் போக்குவரத்துக் கழகம்மூலம் சேலத்திலிருந்து ஏற்காடு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு 10 பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. ஏற்காடு, வெள்ளக்கடை வழித்தடத்தில் 4 அரசுப் பேருந்துகள்மூலம் 6 நடைகளும், ஒரு

[2013 ஏப்ரல் 19

தனியார் பேருந்துமூலம் இரண்டு நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன. வெள்ளக்கடை, நல்லூர், ஆணைக்காடு, பெரியேரிக்காடு வரையிலான 12 கிலோ மீட்டர் சாலையில், ஆணைக்காடு வரையிலான 10 கிலோ மீட்டர் சாலை மிகக் குறுகலாக உள்ளது. குறுஞ்சட்ட பேருந்துகள் மட்டுமே இயக்க முடியும். நல்லூர் மக்கள் தொகை 820. பெரியேரிக்காடு மக்கள் தொகை 780 ஆகும்.

மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சேலம் மாவட்டத்தில் மட்டும் இந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 71 புதிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்க ஆணையிட்டு, பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், சுதந்திரம் பெற்ற காலம் முதல் பேருந்து வசதியே இல்லாத நல்லூர், பெரியேரிக்காடு பகுதிகளுக்கு பேருந்தை இயக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. பெருமாள் அவர்கள்.

திரு. செ. பெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா, தாயே, சூரியனை சுட்டெரித்த சுடர் ஒளியே! 'இலையால்' வென்று இருண்ட தமிழகத்தை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்த ஒளி விளக்கே! (மேசையைத் தட்டும் ஒலி) ஊழல் ஆட்சியை ஒழித்திட்ட உத்தமத் தாயே, தாலிக்குத் தங்கம் தந்த தங்கத் தாரகையே, விலையில்லா அரிசி தந்து ஏழைகளின் பசியைப் போக்கிய அன்னமிட்ட தாயே, வானில் உள்ள நட்சத்திரங்களைக்கூட எண்ணிவிடலாம் தாயே, தாங்கள் மக்களுக்கு வாரி வழங்கும் சலுகைகளை எண்ண முடியவில்லை தாயே! (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் புகழ் பாடும் மக்களோ கோடானு கோடி தாயே, தாங்கள் பதவியேற்றபோது 7 கோப்புகளில் கையெழுத்திட்டு ஏற்றதொரு நல்லாட்சியை அமைத்திட்ட இதய தெய்வமே, தங்களைப் பணிவுடன் வணங்குகிறேன். என்னுடைய கோரிக்கையை ஏற்று சேலத்திலிருந்து ஏற்காடு வழியாக வெள்ளக்கடை, நல்லூர், பெரியேரிக்காடு

கிராமங்களுக்குப் பேருந்து விடப்படும் என அறிவித்த மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் கோடானு கோடி நன்றியினைத் தெரிவித்துக் கொண்டு விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.*

திருமதி த. இந்திராகாந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழகத்தின் காவல் தெய்வம், மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். என்னுடைய துறையூர் தொகுதிக்குட்பட்ட துறையூர் மக்கள் குன்னப்பட்டி, கோட்டாத்தூர், புத்தனாம்பட்டி, சமயபுரம் வழியாக சத்திரம் பேருந்து நிலையம் செல்ல புதிய வழித்தடத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேருந்து வசதி செய்து கொடுக்க முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் மட்டும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டு ஆண்டுகளில் மட்டும் 86 புதிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குவதற்கு உத்தரவிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) பேருந்துகள் மக்களுடைய பயன்பாட்டில் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற வழித்தடங்களில் ஆய்வு செய்யப்பட்டு, பயணிகளுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.*

[2013 ஏப்ரல் 19

திரு. பி.வி. கதிரவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது உசிலம்பட்டி தொகுதி, விக்கிரமங்கலத்திலிருந்து, திண்டுக்கல் மாவட்டம், செம்பட்டி வரை, கல்யாணிப்பட்டி, மேலபெருமாள்பட்டி வழியாக பேருந்து இயக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற பகுதிகளிலே, கிராமங்களாக இருந்தாலும் சரி, நகரங்களாக இருந்தாலும் சரி, அனைத்துப் பகுதி மக்களும் சீரான பேருந்து வசதிகளைப் பெற வேண்டுமென்ற சீரிய நோக்கத்தோடு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டு ஆண்டுகளில் மட்டும் 1,353 புதிய வழித்தடங்களில் பேருந்துகளைத் தங்களுடைய திருக்கரங்களால் கொடியசைத்து துவக்கி வைத்து, (மேசையைத் தட்டும் ஒலி) அவை இன்றைக்கு மக்களுடைய பயன்பாட்டிற்காக இயங்கிக் கொண்டிருக்கின்றன. மேலும், கூடுதல் பேருந்துகள் தேவைப்படும் எஞ்சியிருக்கின்ற இடங்களில் எல்லாம், அதிலும் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டிய பகுதிகளில் ஆய்வு செய்து, பயணிகளுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப அந்த வழித்தடங்களில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று பேருந்து இயக்குவதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. இராஜேந்திரன் அவர்கள்.*

திரு. இரா. இராஜேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன். குறிஞ்சிப்பாடி தொகுதிக்குட்பட்டிருக்கிற, மீனவ மக்கள் அதிகமாக வசிக்கிற அன்னப்பம்பேட்டையிலிருந்து, அய்யம்பேட்டை, பெரியகுப்பம், ஆலப்பாக்கம் வழியாக கடலூருக்குப் பேருந்து ஒன்றினை இயக்க மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக, கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொது மக்களுடைய கோரிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்று, 49 புதிய வழித்தடங்களில் புதிய பேருந்துகள் மக்களுடைய பயன்பாட்டிற்கு இயக்கி வைக்கப்பட்டு, இன்றைக்கு அந்தப் பேருந்துகள் மக்களுக்குச் சேவை ஆற்றிக் கொண்டிருக்கின்றன (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள வழித்தடங்களில் மக்களுடைய எண்ணிக்கைக்கு ஏற்ப, பேருந்துகளுடைய பயன்பாட்டிற்கு ஏற்ப, துறையின் சார்பாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவைப் பெற்று, பேருந்து இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 278, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

278—

மீன் இறங்குதளம்

***21607—திரு. கே. உலகநாதன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஆசாத் நகரில் மீன் இறங்குதளம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS